# மாநகர் மன்றம் 1,000க்கும் மேற்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது




பெட்டாலிங் ஜெயா, ஏப். 22-

இவ்வருடம் தொடக்க காலகட்டத்திலிருந்து இதுவரையில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் மொத்தம் 1,066 க்கும் மேற்பட்ட அமலாக்க பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நாள்தோறும் ரோந்து பரிசோதனை நடவடிக்கை தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருவதாக கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அமலாக்க இலாகாவின் இயக்குநர் முகமது முஷாம்மர் ஜாமாலுதின் தெரிவித்தார். தனிநபர்களும் சட்டவிரோத அங்காடி கடைக்காரர்களும் மாநகர் மன்றத்தின் விதிமுறைகளை மீறி செயல்பட்டு வந்துள்ளனர். இத்தகைய விதி மீறல்கள் அந்நிய நாட்டவர் மத்தியில் பரவலாக காணப்படுகிறது. ஒருங்கிணைப்பு பரிசோதனை நடவடிக்கையின் பேரில் அண்மையில் பிரிக்பீல்ட்சில் மொத்தம் எட்டு வர்த்தக தளங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. குடிநுழைவு இலாகா, காவல் துறையின், உள்நாட்டு வர்த்தக அமைச்சு ஆகிய ஏஜென்சிகளின் ஒத்துழைப்புடன் இத்தகைய பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நான்கு வர்த்தக தளங்களை மூடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது . 1997 ஆம் ஆண்டு ஊராட்சித்துறை சட்டத்தின் கீழ் கோலாலம்பூர் மாநகர் மன்றம் மொத்தம் ஏழு எச்சரிக்கை அறிவிக்கைகளை வழங்கியுள்ளது.